1973 நவம்பர் 30]

உடனடியாக அதை ஆரம்பிக்கத் தேவையான கட்டட வசதிகள் இல்லாமல் அங்கேயே இருந்த பழைய சத்திரத்தைப் புதுப்பித்தோ மேலும் ஒரு வாடகைக் கட்டடத்தைத் தேடியோ அதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையான நடவடிக்கை எடுக்க ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: தஞ்சை மாவட்டத்திலேயே வைத்தீஸ்வரன் கோயிலுக்கு 1,000 வேலி நிலம் இருக்கிறது. அந்த மாதிரி ஸ்தலங்களிலே அனாதை விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எந்த எந்தக் கோயில்களிலே போதுமான நிதிவசதி இருக்கிறதோ, உபரி நிதி இருக்கிறதோ அந்தக் கோயில்களிலே அந்தக் கோயில்களின் அறங்காவலர்கள் தீர்மானம் செய்தால் அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் இறைவனுடைய குழந்தைகள் என்று எண்ணுகின்ற மதவாதிகள் தமிழகத்திலே உள்ளவர்கள். ஆகவே ஏராளமான நிதி வசதி இருக்கின்ற அபரிமிதமான வருமானம் வருகின்ற கோயில்களிலே நிதிபெற்று அனாதை விடுதிகள் கட்டி அவர்களைப் பராமரிக்கக்கூடிய முறையில் ஒரு சட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்டத்திலே அதற்கு வழிவகை இருக்கிற காரணத்தினால் தமிழ்நாட்டிலேயுள்ள கோயில்களிலே, 13 கோயில் களின் மூலமாக இதுபோன்ற அனாதைவிடுதிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். மேலும் மேலும் எந்த எந்தக் கோயில்களிலே நிதி வசதியிருக்கிறதோ அந்தக் கோயில்களின் மூலமாக அவற்றை ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

வடபழனி கோயில் நிர்வாகத்தின் மூலம் கட்டடப் பணி

*** 537 வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வடபழனி ஆண்டவர் கோயில் நிர்வாகிகளுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, உபரி வருமானம் வருகின்ற கோயில்களிலிருந்து பெற்று செய்யாவிட்டாலும் கடனாகப்பெற்றுவது வீடுகள் இல்லாத ஏழைகளுக்கு சிறு சிறு வீடுகளையாவது கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில்களில் பணியாற்று கின்ற ஊழியர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்பற்றிய கேள்வி இது. வடபழனியைப் பொறுத்தவரையில் நிர்வாக அதிகாரிக்கு வீடுகட்டப்படுகிற வேலை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஊழியர்களுக்கும் கட்டிக்கொடுக்கின்ற முறையிலே மாநகராட்சியினிடத்திலே ஒப்புதல் கேட்கப்பட்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த வட பழனியிலே உள்ள கோயிலிலே பணியாற்றுகின்றவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு அந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தக் கோயிலில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே நாம் ஆரம்பித்திருக் கிறோம். அங்கே சர்வே எண் 55, 60-இல் உள்ள நிலம் கோயிலுக்குச் சொந்தமாக இருப்பதால் அந்த நிலத்தினுடைய பரப்பளவில் எத்தனை வீடுகள் கட்டமுடியுமோ அத்தனை வீடுகளைக் கட்ட ஏற்பாடு இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு அந்த அந்த திருக்கோயில்களிலே உள்ள நிதி வசதியிலிருந்து வீடு கட்டிக்கொடுக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கனவே பெரிய கோயில்களிலே நிதி வசதி இருந்தால் அப்படி கட்டிக்கொடுக்கப் படுகிறது. எதிர்காலத்திலே அப்படிப்பட்ட திட்டத்தை மேற்கொள்ள அரசு யோசிக்கும்.

1973 நவம்பர் 30]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : வடபழனிக்குப் பக்கத்திலே நிறைய நிலம் காலியாக இருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தாலும்கூட அந்த ஊழியர் களுக்கு வீடுகட்டிக்கொடுக்கின்ற முறையிலே அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசாங்கத்திற்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோயிலினுடைய நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

கதர் வாரிய அலுவலர்களுக்கு ஓய்வூதியம்

*** 538 வினா—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் துறையில் ஓய்வு பெற்றவர் களுக்கு 'பென்ஷன்' வழங்கப்படுகிறதா ?

(இ) இதுவரை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஒரு நபர்க்கு ஓய்வூதியமும் 38 நபர்களுக்கு தற்காலிக ஓய்வூதியமும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. என் கிட்டப்பா : தலைவர் அவர்களே, வழங்கப்படுகின்ற இந்த பென்ஷன் தொகைக்கு மத்திய அரசு ஏதாவது தொகை கொடுக்கிறதா ? அல்லது மாநில அரசே முழுமையும் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே எழுப்பப்பட்ட ஒரு உரிமைப் பிரச்னைக்கு என்னுடைய தீர்ப்பை நான் நாளை தருகிறேன்.